## காரல் மார்க்ஸ்.

(1) கார்ல் மார்க்ஸ் எவ்விதம் சிந்தனையாளராய் புகழ் பெற்றார்?
ஹெகலின் தத்துவத்தில் இருந்து டார்வினின் பரிணாமக் கொள்கையை கைக்கொண்டிருந்தார்.

2. இளமை வாழ்க்கை கார்ல் மார்க்ஸ் :-
தந்தை ஹென்றிச் மார்க்ஸ் தாய் ஹென்றிட்டா
ஆண்டு 1818, ஜெர்மனி கார்ல் மார்க்ஸ் பிறந்தார்.
இவருடன் பிறந்தவர்கள் 7. ஆண்கள் 2 சகோதரர்.
5 சகோதரிகள் 4 பெண்கள் ஒரு ஆண் இளமையிலே இறந்தார்.
இறந்த பேர்கள் எஞ்சியவர் மூன்று பேர்.
டிரியர் உயர்நிலைப்பள்ளியில் அனுப்பப்பட்டார்.
5 வருடம் படித்தார்.
லத்தீன், கிரேக், ஜெர்மன், பிரெஞ்சு கணிதம்
ஆகிய பாடங்களில் ~~...~~ சிறந்து விளங்கினார்.

3. காரல் எழுதிய பத்திரிக்கைகளின் பெயர் என்ன?
1844ல் ஜெர்மானிய கெசட் என்ற பத்திரிக்கை

4. காரல் திருமணம் செய்த மனைவி எந்த ஆண்டு யார்?
1843ம் ஆண்டு ஜூன் 13ல் மார்க்ஸ் ஜென்னியை மணந்து கொண்டார்.

5. மார்க்ஸ் காலத்தே வாழ்ந்தவர் யார்.
எங்கெல்ஸ் ஆவார்.

6. காரல்மார்க்ஸ் — எங்கெல்ஸ்

இரங்கல்:
"எல்லா நாடும் என் நாடே.
எல்லா மக்களும் என் மக்கள்
நாடுகள் உலக மக்கள்!"

7. உலகத் தொழிலாளர் வாழ்வில் சிறந்த விடியலின் உருவான நாள் எது?

1867 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி

8 காரல் தன் மனைவியாகிய ஜென்னியை பிரிந்தார் அப்பொழுது கூறிய கூற்றுகள்? யாவை?

விளக்கம்:

"உன் பிரிவு எனக்குள் மனக்கிளர்ச்சியை உருவாக்கிறது. எனது சக்திகள் அனைத்தும் அதில் கரைந்து போவதைக் கண்டு உடகைப் பார்க்கிறேன். ஒரு முறை மட்டும் மீண்டும் உன்னை என் இதயத்தோடு அணைத்துக்கொண்டால் போதும் என் இதயம் அமைதியாகிவிடும். அதன் பிறகு எனக்கு இந்த உலகில் இருக்க வேண்டிய தேவை?"

9 மார்க்சியம் என்பது யாது?

மார்க்சியம் (Marxism) என்பது ஒரு சமூகப் பொருளியல் பகுப்பாய்வு முறையாகும். மார்க்சியம் வரலாறு, அரசியல், பொருளியல் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது.

10 மூலதனம் என்றால் என்ன?

மார்க்சியப் பார்வையில் மூலதனம் உற்பத்திக்கான வழிமுறையாகும்

11 சோசலிச பொருளாதாரத்தின் அடிப்படை அமைப்புகள் விளக்குக.

(1) பொதுவுடைமைத் தத்துவத்தின் ஒருபகுதி

(2) மக்களுக்குத் தொண்டு செய்தல்

(3) திட்டமிடப்படும் உற்பத்தியும் சமமாக பகிர்தல்

(4) தொழிலாளர் போராட்டங்களின் முன்னேற்ற தொடர்பு அமைத்தல்.

(5) சோசலிச மனித நேயம்

(6) உலகப் பார்வை முதல் இயல்பாகக் கொண்டு விளங்கி நிற்கின்றன

12 ## கருத்துமுதல் வாதமும் பொருள் முதல்வாதமும்

### முன்னுரை

பண்டைய காலங்களில் மக்கள் தம்மைச் சுற்றி யுள்ள உலகம் எப்படி தோன்றியது? அது எப்படிப்பட்டது? உலகில் மனிதனின் இடம் என்ன என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்த தலைவிலைபோது தத்துவஞானம் தோன்றியது.

தத்துவத்தின் வரலாறு முழுவதுமே பொருள் முதல் வாதம் கருத்து முதல் வாதம் ஆகிய இரண்டு எதிர்மறையான போக்குகளுக்கு இடையே நிகழ்ந்த போராட்டத்தைப் பற்றிய வரலாறாகத்தான் உள்ளது. அது சிந்தனைக்கும் வாழ்க்கைக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பற்றிய கேள்விதான். அதாவது ஆன்மா அல்லது பருப்பொருள் இரண்டில் எது முதன்மை என்ற கேள்விதான் தத்துவஞானத்தின் அடிப்படை கேள்வியாகும். இந்த கேள்விக்கான பதில்தான் சிந்தனையாளர்களைப் பொருள் முதல்வாதிகள் என்றும் கருத்து முதல்வாதிகள் என்றும் பிரித்தது.

கருத்து முதல்வாதிகள் ஆன்மா, (அறிவு கருத்து எண்ணம்) இயற்கைக்கு முன்னரே இருந்தது. என்றும் அதுதான் இயற்கையைப் படைத்தது என்றும் கூறினார்கள். இந்தக் கடவுள் உலகைப் படைத்தார். ஆகியவற்றை தத்துவ அடிப்படையில் போன்ற மதக் கருத்துக்களான தத்துவ அடிப்படைகளாக ஏற்கின்றனர்.

13 ## சோதனை என்பது யாது

முன்னுரை: சோதனை என்பது புதிய சோதனைகள், புதிய படைப்பாக்க புதிய உடைப்புக் கவிதைகள், புதிய படைப்பாக்கங்களையும் உள்ளடக்கிய கவிதையில் சோதனைப் போக்குகள் கவிதைகளையும், சோதனைகளையும், உடைப்புக் கவிதைகளையும் அனைத்து வகை படைப்பாக்கச் சோதனைகளையும் உள்ளடக்கியதாகும். இந்த உள்ளடக்கிய கூறுகள்

அனைத்தும் உடைமையால் தோற்றுவிக்கப்பட்டவையாகும். அவை உடைமையின் உற்பத்தி வடிவங்களாகும். நிறுவனமாக்கப்பட்ட வடிவங்களும் உடைமைகளும். நிறுவனமாக்கப்பட்ட உடைமையே மேலாதிக்கமாகும்.

இவ்வாறாக உற்பத்திக்கான வரலாற்றுச் சூழ்நிலைகளும் உற்பத்திச் சக்திகளும் மாற்றமும் வளர்ச்சியும் அடைவதைத் தொடர்ந்து நிலவுடைமை உற்பத்தி முறைகளும் சமூக உறவுகளும், மாற்றத்திற்கு உள்ளாகின்றது என்பதை நாம் காண்கிறோம்.

(14) விளக்குக: மார்க்சியமும் மதமும்

கட்டுப்படுத்தமுடியாத வாழ்ந்த மனிதர்கள் இயற்கைக்கு எதிரான போராட்டத்தில் தமது இயலாமையையும் அதன் வலிமையையும் உணர்ந்தனர்.

தேவதைகளின் மீது சாத்தான்களின் மீது நம்பிக்கையும் உண்டாயின. தேவதைகளின் மீது கொண்டனர். இந்த நம்பிக்கையே சமயத்தோற்றத்திற்குச் சிந்தனையை அமைத்து. மறைமுகமான, வாழ்வு உண்மை நமது நம்பிக்கை அச்சங்களை நீக்கி இயல்பானதை ஆக்கிவைத்திருந்தது.

எனவே சமயங்களுமே மனிதர்களின் அன்றாட உணர்வுகளைக் கட்டுப்படுத்தியது.

புராதன சக்திகள் மற்றும் மனிதர்களின் மனங்களில் எதுவும் கீழ்மையான பரிணாமத்தில் ஏதும் வேறாகவும் இல்லை.

மேலும் ஏற்பட்ட பரிணாம போக்கில் இவை மக்களிடையே எல்லாம் பண்புகளை பலவகையான உணர்வு தோற்றுவிக்கின்ற போக்கினை

## மத எதிர்ப்பு விளக்கம்

(15) விளக்கம்

மத எதிர்ப்பு இயக்கத்தின் அடிப்படையாக இருப்பது மனிதனே மதத்தை உண்டாக்குகிறான். மதம் இன்னும் தன்னைத்தானே இன்னும் கண்டறிந்து கொள்ளாத -வனின் அல்லது தன்னைத்தானே இழந்துவிட்டவனின் தன்னுணர்வும் தன் மதிப்புணர்வும் தான் மதமாகும்.

மனிதன் உலகுக்கு அப்பால் அமர்ந்திருக்கும் கற்பனையானவன் அல்ல, மனிதன் என்பவன் மனிதனின் உலகம் தான், சமூகம் அரசாங்கம் தான். இந்த உலகமும் அரசும் சமூகமும் பற்றிய தலைகீழ் உணர்வாக மதம் இருக்கிறது.

ஏனென்றால் அவையும் தலைகீழ் உலகமே. அந்த உலகத்தின் வேதனை கொள்கையாகவும் அது வெளிப் படுகிறது. ஒடுக்க இயலாமை கட்டுப்படுத்துகிறது. மன அழுத்தங்களை வேதனை சாதனைகளையும் மதம் இருக்கிறது.

16. மதம் என்பது என்ன? அது யாது?

மதம் என்பது ஒடுக்கப்பட்டவர்களின் பெருமூச்சாகவும் அதற்கு எதிரான கண்டனமாகவும் இருக்கிறது. இது இதயமற்ற மக்களின் இதயமாகவும் ஆன்மாவற்ற நிலைகளின் ஆன்மாவாகவும் இருக்கிறது.

17. லெனின் கருத்துக்கள்

விளக்கம். பெரும் பெருந்திரளான மக்களை ஏனையோருக்காக தாம் செய்யும் ஓயாத வேலையாலும் மற்றும் இல்லாமையாலும் நசுக்கப்படும் இடங்களை, எங்குமே தனிமைப்பட்டதால் நசுக்கப்படும் இடங்களை அன்றி, இரட்டிப்பாக்கும் சமூக ஒடுக்குமுறையின் பல -வடிவங்களின் மதமும் ஒன்றாகும்.

நாம் மதத்தை எதிர்க்க வேண்டும். அதுதான் அனைத்துப் பொருள் முதல்வாதத்தின் அகச்

அடிமையாகும்.

ஆனால் மார்க்ஸியம் அரிச்சுவடியோடு நின்றுவிட்ட பௌவர் மதவாதம் அல்ல. மார்க்ஸியம் அதற்கு அப்பால் செல்கிறது. மதத்தை எதிர்ப்பது எப்படி என்று நாம் அறிந்திருக்க வேண்டும்.

பௌவர் மதவாதத்தில் நாம் விலக்க வேண்டுமென்று அது கூறுகிறது.

மதத்தின் சமூக வேர்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட வர்க்க இயக்கத்தின் ஸ்தூலமான நடைமுறையோடு இப்போராட்டம் இணைக்கப்பட வேண்டும்.

விவசாயிகளுடையும் மதம் தன் பிடிப்பை வைத்திருப்பது ஏன்? அதற்கு காரணம் மக்களின் அறியாமை என்று பதிலளிக்கிறான். மதம் ஒழிக. நாத்திகம் நீடூழி வாழ்க. நாத்திகக் கருத்துக்களைப் பரப்புவதே நமது தலையாய கடமை. இதுவும் உண்மை அல்ல.

குறுகிய தொழிலாளித்துவ உயர்த்து வேளை நடைய கருத்து என்று மார்க்ஸியவாதி கூறுகிறான்.

அத்தியமான திருமணங்களை விட வேண்டும். இந்த கோரிக்கைகள் பூரணமாய் நிறைவேறும் போதுதான் அவமானகரமான கொடுமைகட்டை அந்தக் கடைசி காலத்துக்கு கொண்டுவரும் என்கிறார் லெனின்.

III அலகு முடிந்துவிட்டது.

# அலகு - 4

# வள்ளலார் வரலாறு

இராமலிங்க அடிகளார் சிறந்த இறை அருளாளராகவும், இலக்கியச் சான்றோராகவும் விளங்கிய பெருந்தகை ஆவர். இவர் படைத்தருளிய திருவருட்பாவின் ஆறு திருமுறைகளையும், உரைநடைப் பகுதியையும் அடிப்படையாகக் கொண்டு வள்ளலாரின் சமுதாயச் சிந்தனைகளைப் புலப்படுத்தலே இவண் நோக்கம் ஆகும்.

வள்ளலார் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் மக்கள் பிறப்பின் அடிப்ப்டையிலும் தொழிலின் அடிப்படையிலும் அமையும் சாதி வேறுபாடுகளின் காரணமாகவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் அமையும் வேறுபாடுகளின் காரணமாகவும் உயர்ந்தோர் என்றும், தாழ்ந்தோர் என்றும் தரப்படுத்தப் பெற்றிருந்தனர் எனக் கருதலாம். இருதரப் பிரிவுகளின் அடிப்படையில் உயர்நிலை அடைந்தவர்கள் செல்வ வளம்மிக்க, இன்பம் நிறைந்த, ஆதிக்கம் மிக்க செல்வாக்கு நிறைந்த இனிய வாழ்க்கையும் தாழ்நிலையுற்றோர் துன்பம் மிக்க, வறுமை நிறைந்த, இழிந்த, சமுதாய, சமய அரசியல் இயலாமைகள் நிறைந்த வாழ்க்கையும் வாழ்ந்துள்ளனர். இறையுணர்வூட்டும், இறை அனுபவங்களை எடுத்துக்கூறும், இறை நெறிக்கு மக்களை வழிநடத்தும் இனிய, உணர்வுமிக்க பக்தி நலம் கனியும் பாடல்களையும், உரைநடைகளையும் படைத்தவர் வள்ளலார்.

மக்களிடையே இறை உணர்வை ஊட்ட மாலை, பத்து, விண்ணப்பம், வேட்டல், இரங்கல், மான்மியம், ஏங்கல், ஆசிரியம்,

விருத்தம், தொடை, பதிகம், கொம்மி, விலாசம், நெடுமொழி, வஞ்சி, பஞ்சகம், தூது, இயன்மொழி, உலாத்திறம், தோத்திரம், கலிவெண்பா, வாழ்த்து, அட்டகம், அலங்காரம், கண்ணி, உபதேசம், அகவல், பள்ளி எழுச்சி, உந்தியார், பந்தாடல், அலங்கம் போன்ற பொருண்மை அடிப்படையிலான நாட்டுப்புற விளையாட்டுக்கள் அடிப்படையிலான பல இலக்கிய வகைகளைப் பயன்படுத்திக் கற்றாரையும் பாமரரையும் கவரும் வண்ணம் பாடல்கள் புனைந்துள்ளார்.

மக்களிடையே இறைநெறியைப் பரப்புவதற்குமுன் அவர்களுடைய வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை, பிடிப்பை உண்டாக்க வேண்டும் என உணர்ந்தார் வள்ளலார். எனவே, சமுதாயத்தில் சாதியின் பெயரால், பொருளாதாரத்தின் அடிப்படையில், சமயங்களின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படும் மக்களிடையே ஒற்றுமையை உருவாக்க வேண்டியது தம் ஆன்மீகக் கடமை என உறுதிபட நினைந்தார். இதனடிப்படையில் வள்ளலார் படைப்புகளில் இறையுணர்வுச் சிந்தனைகளினூடே சமுதாயச் சிந்தனைகளும் விரவிக் காணப்பெறும் போக்கை அறியமுடிகின்றது.

இவ்வகையில், சமுதாயத்தை துண்டாடும் சாதி வேறுபாடுகள், மக்களிடையே உயர்வு தாழ்வுகளை உருவாக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சமயங்களின் பெயரால் சமய வாதிகளின் தன்னல ஆசையால், தவறான கருத்துக்களைப் பரப்புவதால் சமுதாயத்தில் காணப்படும் சமயப் பூசல்கள் ஆகியவற்றைக் கடிந்து கூறுவதுடன், உலகியலில் மக்களின் செயல்கள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை அவர்கள் மனதில் தைக்கும் வண்ணம் எடுத்துக் காட்டவும் செய்கின்றார். பிறர் செயல்களைத் தம்மேலிட்டுக் கூறும் சமயச் சான்றோர்களின் மரபையும் வள்ளலார் பின்பற்றி மக்களின் இக்குறைபாடுகளைத் தாம் செய்வதாகக் கூறுகின்றார் எனலாம். தன் நிலை கூறல், உலகியல் நிலை கூறல், இறைவனிடம் வேண்டுதல், சமுதாய

மக்களுக்கு அறிவுரை கூறல் என்ற நிலைகளில் வள்ளலார் தம் சமுதாயச் சிந்தனைகளை மென்மையாகவும், வன்மையாகவும், சாடியும், அச்சுறுத்தியும், இரங்கியும், வேண்டியும் வெளிப்படுத்தும் போக்கை அறியமுடிகின்றது.

இவ்வாறு சாதி வேறுபாடுகளற்ற, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளற்ற சமயக் காழ்ப்பற்ற சீரிய, சமத்துவ, உலகம் போற்றும் சமுதாயத்தைப் படைத்த பின்னரே, மக்களை இறை நெறியில் ஈடுபடுத்த முடியும் என உணர்ந்த வள்ளலார் சமத்துவச் சிந்தனைகள் பலவற்றை வெளிப்படுத்தவும் செய்கிறார்.

இறைவனை அடைய இறைவன் அருளைப் பெற முயலும் மக்கள் சிறந்த சமுதாய உறுப்பினர்களாக வாழ வேண்டியது இன்றியமையாதது என உணர்ந்த வள்ளலார் பல்வேறு சமுதாய மதிப்புகளையும் வலியுறுத்தி மக்களுக்கு அறிவுரைகள் கூறுகின்றார்.

இவ்வாறு திருவருட்பா இறையுணர்வூட்டும் இலக்கியமாக மட்டும் அமையாது. சிறந்த சமுதாய நலம் பயக்கும் இலக்கியமாகவும் அமையும் வண்ணம் வள்ளலார் படைத்துள்ளமையை எடுத்துக் காட்டுவதே நோக்கம் ஆகும்.

# விவேகானந்தர் வரலாறு

அன்பும் அறிவும் மக்களுக்குரிய இரண்டு கண்களாகும். அவற்றைப் பெற்றோர் மக்களாய்ப் பிறந்து, கடவுளரான பேறுடையோர் ஆவர். இந்த உலகத்தில் நிலையானது, நிலையற்றது எது என்பதை மனிதன் தெளிவுப்படுத்திக் கொள்ள அறிவுத் துணைபுரியும். செல்வம்நிலையற்றது என்பதை உணர்ந்தால் தான் அச்செல்வம் பெற்ற போது நிலையான செயல்களைச் செய்து புகழ் பெற முடியும். அது போலவே உடம்பு நிலையற்றது என்னும் தெளிவிருந்தால் தான் அவ்வுடம்பு நிலைத்திருக்கும் போதே நிலையான செயல்களைச் செய்து புகழ்பெற முடியும். அவ்வகையில் இந்திய நாட்டின் ஆன்மீக மறுமலர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய பெருமக்களுள் இராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் தனிச்சிறப்புடையவர்கள். நாகரிக வாழ்க்கையின் ஆரவாரங்களால் நலிந்துபோய் உண்மை நெறியை உணர வாய்ப்பின்றி அலைந்து திரியும் இன்றைய மனிதர்க்குச் சரியான பாதையைச் சுட்டிக்காட்டிப் பக்குவப்படுத்துவன இவ்விரண்டு ஆன்றோர்களின் சிந்தனைகளாகும்.

## விவேகானந்தரின் உதயம்

பெருந்தவத்தால் புனிதமான இடத்தில் தான் சான்றோர்கள் பிறக்கின்றார்கள்; நல்ல சூழ்நிலையாம் தொட்டிலில் தான் தாலாட்டப்படுகின்றார்கள்; நரேந்திரர் உதித்த தத்தர் குடும்பம். பரம்பரையாகச் செல்வம் வாய்ந்தது; அறத்திற்கும், அன்பிற்கும் விரிந்த படிப்பிற்கும், எதற்கும் அஞ்சாத வலிமைமிக்க குடும்பமானாகும். அத்தகைய புகழ்வாய்க்கப் பெற்ற குடும்பத்தில் உலகத்திற்கே ஞான விளக்காய்த் திகழ்ந்த நரேந்திரர் 1863-ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி திங்கட்கிழமை விசுவநாதர் தத்தர் என்பவருக்கும் புவனேஸ்வரி தேவியாருக்கும் மகனாகப் பிறந்தார்.

தாயார் புவனேஸ்வரி தேவியார் சிவபிரானை இடையறாது இறைஞ்சி வழிபடுபவர். இசையில் மிக்க தேர்ச்சியுடையவர். தந்தையாரும், இசைக்கலையை மிக்க ஆர்வத்துடன்

போற்றக்கூடியவர், நரேந்திரரின் இசைப் புலமைக்கு இதுவே காரணமாக அமைந்தது.

## இளமைப் பருவம்

நரேந்தரின் தாயார்தான் ஆன்மிக விதையை முதன் முதலாகத் தூவினார். இராமாயணம், பாரதம் இவற்றில் வரும் வீரர்களின் அருஞ்செயல்களைத் தம் மைந்தருக்கு எடுத்துக்காட்டினார். இராமனுடைய தெய்வ வாழ்வு இவருடைய சிந்தையைக் கொள்ளைக் கொண்டது. அனுமார் தாம் இவருக்கு இலட்சிய புருஷராய்த் திகழ்ந்தார். மகாபாரதத்து வீரனான அருச்சுனனுடைய வாழ்வு இவருக்கு ஆன்மிகத் துறையில் ஒரு புதிய பாதையை வகுத்துக்காட்டியது. இவரது அறியாக் காலத்திலேயே (ஐந்து அல்லது ஆறு வயதில்) தியானத்தை விளையாட்டாகப் பாவனை பண்ணத் தொடங்கினார். இப்பாவனை இவருடைய உள்ளத்தில் துயின்று கொண்டிருந்த ஆன்மிகப் பேருணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிவிட்டது.

## கல்வி

நரேந்திரர் எதனையும் நுணுக்கமாய்த் துருவி ஆராயும் ஆற்றல் வாய்ந்தவர். இவருடைய நினைவுச் சக்தியோ சொற்கடந்தது. இவர் 1879ஆம் ஆண்டு தம் 16ஆம் ஆண்டில் பிரவேசப் பரீட்சையில் தேறி, ஓர் ஆண்டு கல்கத்தா அரசாங்கத்தார் கல்லூரியில் படித்தார். பிறகு ஸ்காட்லாந்து நாட்டவர் நிறுவிய பாதிரிக் கல்லூரியில் தொர்டர்ந்து கல்வி பயின்றார். வேட்ஸ்வொர்த்தின் இயற்கை எழிலில் தன் மனத்தைப் பறிகொடுத்தார்.

கல்லூரியின் தலைவரான வில்லியம் ஹெஸ்டி என்பவர் தட்சிணேசுவரத்தில் இருந்த இராமகிருஷ்ண பகவானை பற்றித் தம் சொற்பொழிவில் குறிப்பிட்டார். இதைக் கேட்ட நரேந்திரர் முதன் முதலாக 1881-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இராமகிருஷ்ணரைச் சந்தித்தார். இச்சம்பவம் உலக வரலாற்றிலேயே ஒரு மாபெரு நிகழ்ச்சி என்று பொன்னேட்டில் பொறிக்கலாம். இவரது

வாழ்க்கையைச் சாத்திர ஆராய்ச்சி, குருவின் கீழ்ப்பயிற்சி, நாட்டுப்பணி என்ற மூன்று பிரிவிகளாகப் பிரித்து காணலாம்.

## சாத்திர ஆராயச்சி

நரேந்திரர் வடமொழியை நன்றாகக் கற்றார்; அதன் கண் அடங்கியுள்ள காவியச் சுவைகளை இன்புறப் பருகினார். மேலை நாட்டுக் கவிகளின் நயங்களில் தோய்ந்தார்; மேலை நாட்டுத் தத்துவ ஆசிரியர்களான பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ஹெகல், காண்டு, ஹெர்பார்ட்டு ஸ்பென்சர், ஷோப்பனேர் இவர்களுடைய நூற்கடலின் ஆழங்களைக் கண்டார். சமணர் தத்துவத்தை ஆராய்ந்தார். சாக்கியம் பயின்றார்; பைபிள், குரான் போன்ற சமய நூல்களின் நுட்பங்களைத் தம் கூர்ந்த அறிவு கொண்டு சோதித்தார்; வேதம், உபநிடதம், கீதை முதலிய சமய நூல்களையும் திறனாய்வு முறையில் நோக்கினார்.

மெய்யொளி காண எல்லாச் சமயக் கொள்கைகளையும் தட்டிப் பார்த்தும், அவற்றிலிருந்தும் இவருடைய அறிவுக்குச் சமாதானம் அளிக்கக்கூடிய விடை ஒன்றுமே எழுந்தபாடில்லை. இவர்தம் உள்ளத்திற்கு உயர்ந்த சமாதானம் எங்கும் கிடைக்காமல், மனம் அல்லலுற்றார்.

# வள்ளலாரின் அறிவியல் சிந்தனையும் மெய்யியல் கோட்பாடும் தொண்டு நிறுவன உருவாக்கமும்

மனிதனை மேம்படுத்தும் உயரிய நோக்கம் கொண்ட ஆன்மிகமும் அறிவியலும் இணைகோடுகளாகும். மனிதப் பண்பாட்டின் விளக்கமாக அமைவது சமயம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஆன்மிக எண்ணங்கள் என்னும் சித்தம் தோன்றும், உலகில் உள்ள மக்கள் அனைவரும் துன்பம் நீங்கி இடைநிலையை அடையச் சமய பெரியோர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளனர். சமுதாயக் கருத்துக்களான அகம், புறம் சார்ந்த பாடுபொருளை மட்டும் தமிழ் இலக்கியங்கள் கொண்டிருக்கவில்லை மாறாக மனித வாழ்விற்கு உயிர் நாடியாக இன்று கருதப்பெறும் அறிவியலும் பல்வேறு நிலைகளில் பழம் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. அறிவியல் சிந்தனைகள் கால வளர்ச்சிக்கு ஏற்ப இலக்கியங்களில் சுட்டிக் கூறப் பெற்றுள்ளன. பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. அக்கருத்துக்களைத் தொகுத்துக் காண்பதும் உலகிற்கு எடுத்தியம்புவதும் இலக்கியவாதிகளின் கடமையாகும்.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களுள் தலைசிறந்தவராகப் போற்றப்படுவர் வள்ளலார் என்று அழைக்கப்பெறும் இராமலிங்க அடிகளார் ஆவார். இவர் சாதி, மத பேதங்களையும் வகுப்புவாத சண்டைகளையும் வன்மையாக கண்டித்துப் பாடியுள்ளார். உருவ வழிபாட்டை நீக்கி இறைவனை அருட்பெருஞ்சோதியாய்க் கண்டவர் வள்ளலார். உயிர்கள் மீது கருணையும் எம்மதமும் சமம் என்று கொள்கையுடைய சமரச சன்மார்க்கமும் அடிகளாரின் உயிர் மூச்சான கொள்கைகளாகும்.

## அணுவின் படைப்புக் கோட்பாடு

அண்டத்தைப் பற்றிய ஆய்வு பலநிலைகளில் இப்பொழுது மேற்கொள்ளப்பெற்று வருகிறது. தற்பொழுது அறிஞர்கள் பல்வேறு அண்டங்கள் உள்ளன என்றக் கருத்துக் கொண்டுள்ளனர். ஆனால் இலக்கியவியலார்கள் இக்கருத்தைப் பல

நூற்றாண்டுகளுக்கு முன்பே நமக்குத் தெளிவாகத் தெளிவுபடுத்தியுள்ளனர் என்றால் அது மிகை அன்று. அறிவியல் உண்மைகள் மாற்றமுடையனவாகவும் வளர்ச்சியுடையனவாகவும் உள்ளன. அதைப்போன்று ஆன்மிகவாதிகள் கூறும் அறிவியல் கருத்துக்களும் வளர்ச்சி நிலையை எட்டியுள்ளதைக் காணமுடிகின்றது.

**"அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைந்தருளித்**

**திண்தங்கு மாறு இருத்தும் சித்தன் எவண்."**

என்று வள்ளலார் தம் பாடலில் குறிப்பிடுகிறார். உலகங்கள் யாவற்றையும் ஓர் அணுவுள் அடைத்துக் கெட்டுப் போகாமல் காப்பாற்றித் தங்கும்படி இருக்கச் செய்தல் இறைவனின் செயல் என்பது இப்பாடல் அடிகளின் கருத்து ஆகும். அவன் அசைந்தால் அகிலம் எல்லாம் அசையும். அவனே அனைத்தும் என்பதை உலகுக்கு உணர்த்த எண்ணிய வள்ளலார் அண்டங்கள் அனைத்தையும் இறைவன் அணுவுக்குள் அடங்கியவன் என்கிறார். இறைவனின் மேன்மையை உணர்த்தவே இக்கருத்தை நோக்கமாக கொண்டுள்ளார் வள்ளலார். அணுவின் ஆற்றலை உள்ளடக்கித்தான் அணுகுண்டு தயாரிக்கப்படுகின்றது என்பதால் இதனுள் அறிவியலும் அடங்கியுள்ளது.

அணுவை பல சிறு கூறுகளாகப் பிரித்தாலும் அதனுடைய ஆற்றல் மாறாமல் அமைகின்றது. இதனை நாம் தற்பொழுது அறிவியல் முறையில் ஆராய்ந்து அறிந்து பயனடைந்து வருகின்றோம்.

மேலை நாட்டாரின் குறிப்பாக அறிஞர்களின் அறிவியல் அணுவைப் பற்றியும், அணுவின் பேரொளியைப் பற்றியும் வள்ளலார். 1874-க்கு முன்னரே நாம் அதிசயிக்கும் வண்ணம் குறிப்பிட்டுள்ளார்.

# அலகு - 5

# அம்பேத்கர் வரலாறு

நம் நாட்டின் தவப்புதல்வர்களுள் ஒருவர் அம்பேத்கர். இவருடைய வாழ்க்கையும் உழைப்பும் பெரிய போராட்டத்தின் சகாப்தம். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் விடுதலைக்காக 19-ஆம் நூற்றாண்டில் மகாராஷ்ராவில் அவதரித்த புரட்சியாளர்.

மகாராஷ்டிராவில் "மகர்" என்ற சாதிப்பிரிவில் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள் அம்பேத்கர் பிறந்தார். இவருடைய பூர்வீக கிராமம் அம்பவாடி. இது ரத்தினகிரி மாவட்டத்தில் இருந்தது. இவருடைய தந்தையார் பெயர் இராம்ஜி சக்பால். இவர் இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். கடின உழைப்பின் காரணமாக அப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். பின்னாளில் சுபேதார் என்ற சிறப்புத் தகுதியினையும் பெற்றார். பிரிட்டிஷ் இந்திய சேனையில் சேவை செய்தார்.

ராம்ஜியின் மனைவியின் பெயர் பீமாபாய். இவரும் போர் வீரரின் மகளாவார். இவருடைய குடும்பத்தாரும் பட்டாளத்தில் சேவை செய்தவர்கள்.

ராம்ஜிக்கும் பீமாபாய்க்கும் 14 பிள்ளைகள் பிறந்தார்கள். அந்த பிள்ளைகளில் கடைசி பிள்ளையாக பிறந்தவர் தான் டாக்டர் அம்பேத்கர். மாவோ இராணுவ ஸ்தலத்தில் பிறந்தார். இவ்விடத்தில் தான் இவர் தந்தையார் பணியாற்றினார். இவருடைய முழுப்பெயர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர். மகர் இனம் மற்றும் இவருடைய குடும்பத்தில் கபீர்தாசரின் போதனைகளைப் பின்பற்றினர். தேவதையின் பல்லக்கு

சுமப்பவர்களைக் கொண்டவர்களாக இருந்தனர். போர் வீரர்களாவர், மகர்களுடைய போர்த்திறமைகளை அறிந்து சத்திரபதி சிவாஜி தம்முடைய படையில் சேர்த்துக் கொண்டார்.

மராட்டியர்கள் ஆட்சியில் கிராம அதிகாரிகளோடு சேர்ந்து குறிப்பிட்ட சாதிக்காரர்கள் குறிப்பிட்ட வேலையைச் செய்ய வேண்டியிருந்தது. இதற்காக வரி இல்லா நிலங்கள் இலவசமாய் கொடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சி வந்தவுடன் இம்முறை ரத்து செய்யப்பட்டது. இப்பதவிகளுக்கு சம்பளம் பெறும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இந்நிர்வாக முறையே "மகர்" இனத்தவரை புறக்கணித்தது. ஆனால் ஆங்கிலேயர்கள் மகர் பரம்பரை பொறுப்புக்களை ரத்து செய்யவில்லை. அவர்கள் முன் போலவே தன் கடமைகளைச் செய்து வந்தார்கள். ஆனால் நிலவரிச்சலுகை அளிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நிலவரி உயர்த்தப்பட்டது. 1874-இல் அரசாங்கத்தில் சட்டம் இயற்றப்பட்டது. இனாம் நிலங்களைப் பராதீனம் செய்யக்கூடாது. செய்தால் தண்டனை விதிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மகர் சாதியர் பரம்பரை குற்றவாளிகள் என்று பிரித்துள்ளது. இம்மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தார்கள். ஊதியம் இன்றியே உழைத்தனர். கட்டாயப்படுத்தி வாங்கப்பட்ட வேலையாகும். மகர்கள் பலதிறப்பட்ட பயனுள்ள வேலைகளைச் செய்தார்கள். அம்பேத்கரின் முன்னோர்கள் சேனையில் இருந்தவர்கள் இவர்களுடைய குணாதிசயங்களே அம்பேத்கருக்கும் அடிப்படையாக அமைந்திருக்கலாம்.

இராம்ஜி சக்பாலுக்கு பிறக்கப்போகும் குழந்தை வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கும் என்று உறவினர் ஒருவர் சோதிடம் கூறியுள்ளார். 14-வது குழந்தையாகப் பிறந்த அம்பேத்கருக்கு பீமன் என்று பெயரிட்டனர். ஏனெனில் தாய் தந்தை பெயரை முன்னிட்டு வைத்துள்ளனர்.

## மூன்றாவது வட்டமேசை மாநாடு

இந்தியாவுக்கு வயது வந்தோர் ஓட்டுரிமை தற்போதுள்ள நிலையில் சாத்தியமால்ல. விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பது இதன் தீர்மானங்களில் ஒன்றாகும். மற்றொரு முக்கிய சிபாரிசு யாதெனில் தாழ்த்தப்பட்ட இனத்தாரின் ஓட்டுரிமையை இன்னும் விரிவுபடுத்த வேண்டும்.

பூனா ஒப்பந்தத்தின் மூலம் ஆலய பிரவேச தாக்கம் நாடு முழுவதும் பரவியது.

டாக்டர் அம்பேத்கர் 23.11.1933-இல் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் டைம்ஸ்-ஆப்-இந்தியா பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அப்பேட்டியில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அளிக்கப்போகும் பொறுப்பான ஆட்சியில் இந்திய மன்னர்கள் சமஷ்தானம் இந்தியாவில் சேர்வதா வேண்டாமா என்ற இணைப்பு கட்டாயமாக இருக்கக்கூடாது.

## இந்திய அரசியல் நிர்ணய சட்டம்

24.8.1946-இல் இடைக்கால மந்திரிசபை அங்கத்தினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. இதில் பண்டிட் ஜவகர்லால் நேரு, சர்தார் பட்டேல், மௌலான அபுல்கலாம் ஆசாத், ஸ்ரீ இராஜகோபாலாச்சாரி, ஸ்ரீசரத் சந்திரபோஸ் மற்றும் ஸ்ரீஜகஜீவன்ராம் ஆகியோர் இருந்தனர்.

முஸ்லீம் லீக் முதலில் வைஸ்ராயுடன் ஒத்துழைக்கவில்லை. ஆகையால் முஸ்லீம் இடங்கள் வேறு முஸ்லீம் தலைவர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் அளிக்கப்பட்டன.

அந்தக் குறிப்பிட்ட நாளில் டாக்டர் அம்பேத்ர் பூனா ஷெட்யூல்டு வல்பார் சம்மேளனத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். அவரும் அவருடைய சகாக்களும்

இடைக்கால மந்திரி சபையில் தங்கள் இனத்தாருக்கு போதுமான பிரதிநிதித்துவம் அளிக்காதது கண்டு பெரிதும் ஏமாற்றமடைந்தனர்.

புதிய இந்திய அரசாங்கத்தில் தம் இனத்தாருக்கு போதுமான பிரதிநிதித்துவதத்தை உறுதிப்படுத்த கடைசி கோரிக்கையாக அவர் இங்கிலாந்திற்கு செல்ல 15.10.1946இல் புறப்பட்டார். அம்பேத்கர் அங்கு சென்ற பொழுது முஸ்லீம் இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்துக் கொண்டது.

இங்கிலாந்தில் டாக்டர் அம்பேத்கர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லியையும் இந்திய காரியதரிசியையும் கலந்து பேசினார். வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் சிலரை சந்தித்தார். இவர் கோரிக்கைக்கு யாரும் செவி சாய்க்கவில்லை. இதனால் 1946-இல் நவம்பரில் பம்பாய்க்கு திரும்பினார்.

## அரசியல் நிர்ணய சபை

அரசியல் நிர்ணய சபை 9.12.1946-இல் திறந்து வைக்கப்பட்டது. முஸ்லீம் லீக் அதனை பகிஷ்கரித்து இராசேந்திர பிரசாத் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் விதிமுறைகள் உருவாக்க ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

அரசியல் அமைப்பின் குறிக்கோள்களைப் பற்றி டிசம்பர் 13-ல் பண்டிட் ஜவஹர்லால் நேரு தீர்மானத்தை ஆரம்பிக்கும் முகமாக ஓர் அறிய சொற்பொழிவாற்றினார். ஒரு சுதந்திர பலமுள்ள ஜனநாயக குடியரசு நாடாக இந்தியர் விளக்க வேண்டும் என்று கூறினார்.

15.12.1946-இல் டாக்டர்.அம்பேத்கரை அவைத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பகுத்தறிவுக்கு ஒத்த ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

# பெரியாரும், சமூகச் சிந்தனையும்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமுதாயத்தை தட்டியெழுப்பி இந்த மண்ணில் தீர்க்கமானதொரு சிந்தனைகளை விதைத்துச் சென்றவர் பகுத்தறிவுக் காவலர் தந்தை பெரியராவார். தான் மனிதனாகப் பிறப்பெடுத்ததே மாந்தரினத்துக்குத் தொண்டு செய்யவே என்பதின் மெய்ம்மையை, ஒவ்வொரு செயலிலும் செய்து காட்டியப் பெரியோனோக, வீரமிக்கவராக, பொதுநலப் பண்பாளராக, செயல் திறன் மிக்கவராக, சமூகத்தைப் பன்முகப் பார்வை கொண்டு நோக்கும் தலைமையாளராக விளங்கிய தகைமையாளர், தன் பேச்சிலும், எழுத்திலும், தன்னலத்தை அகற்றி, விருப்பினை நீக்கி, தொண்டாற்றும் பணி மேற்கொண்டு சமூக நல்வாழ்வு ஒன்றனையே சிந்தனையாக வெளிப்படுத்தியதால் தமிழகமானது சமூக மாற்றத்தையும், சீரிய வாழ்வினையும் பெற்றுத் திகழ்ந்ததெனலாம். அவராற்றியப் பணிகளில் சமூகமும், பெண்ணினமும், மொழியும் எத்தகைய மாறுதலைப் பெறவேண்டும் என்பதை ஆழ்மனப் பொதியலாகக் கொண்டிருந்ததனை அவரின் எண்ணச் சிதறல்கள் உணர்த்துகின்றது.

## சமூகச் சீர்திருத்தச் சிந்தனை

தன் காலச் சூழலில் சமூகப் பாதிப்புகளை உள்வாங்கி அதற்கெதிராகத் தன் தாக்கத்தை வெளிப்படுத்திய வலிமையானப் போராட்டக் குணமிக்கவர் பெரியார். அவர் தம் பார்வையில் சமூகமென்பது வர்க்கப் பேதமற்றதாக, மூடத்தனமகற்றப்பட்ட முற்போக்கு நிலையோடு அமைய வேண்டுமென்பதேயாம். இது நிகழ்வுற வேண்டுமாயின் சமூக வழிகாட்டுதலுக்குரிய பகுப்பினை எடுத்துக்காட்டக் கூடிய, அழுத்தமுறப் பதிவு செய்ய உரைக்கும் கருத்துக்களைப் பின்பற்றி நடக்கும் செயல்திறன் உடையவராகப் பெரியார் தன்னை முன்னிறுத்திக் கொண்டார். மாந்தரினம் வளமையுறுவதற்கு நற்சிந்தனையும், அச்சிந்தனை வழி செயலாற்றக்கூடிய சமூகப் பாதுகாவலராகவும் கொள்கைகள் ஏராளம் கொண்டு மிளிர்ந்திருந்த அவரிடத்தில் மாற்றம் ஒன்றே குறிக்கோளாக அமைந்திருந்தது. இந்நோக்கத்தினால் சமூகச் சீர்கேடுகள் களையப்பட்டன. குறைபாடுகள் நீக்கப்பட்டன. மனித நலம் பேணப்பட்டது. அறியாமை அகற்றப்பட்டது. முற்போக்குச் சிந்தனை வளர்க்கப்பட்டது. இவற்றையெல்லாம் திறம்பட நடத்திக் காட்டக்கூடிய நடுநிலைப் பார்வையாளராக நிறைந்த கூர்நோக்கு வாய்க்கப் பெற்றவரினால் தமிழகமானது அரசியல், இனம், சமயம், பெண்ணடிமை எதிர்ப்பு, மூடச் செயலொழிப்பு, மொழிச் சீர்திருத்தம் போன்ற கருத்துருக்களினால் படிப்படியாக மாறுதலுற்று மிளிர ஆரம்பித்தது. சமூகத்தின் உயர்வு, தாழ்வினை நீக்கி, மாந்தரினம் சுயமாக வாழ இலட்சியக் கொள்கையினை மூலதனமாகக் கொண்டு பொது நலத்தை நாடிய பெரியார் பற்றி

> **"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளார்."**

தந்தை பெரியார் சிந்தனைகள், ப.7, டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்) என பாவேந்தர் எடுத்துக் காட்டியிருப்பது பெரும் பெருமையுடைத்து எனலாம்.

## எண்ணமே வாழ்வு

எண்ணமே செயலாக்கம் பெறுகிறது. அவரவர் எண்ணங்களுக்கு ஏற்பவே அவரவர் வாழ்க்கை அமையும் என எம்.எஸ்.உதயமூர்த்தி குறிப்பிடுகின்றார். ஜேம்ஸ் ஆலன் என்ற மிகப்பெரிய தத்துவ ஞானியும் மனிதனின் எண்ணங்களே சூழ்நிலைகைளாக மாறுகின்றன என்கிறார். இதனை

**“மனிதன் என்ன எண்ணுகிறானோ அதுவாக மாறுகிறான்! சுய முன்னேற்றம் கொண்ட எண்ணங்கள் முன்னேறும். ஒரு சமூதாயத்தை உருவாக்குகிறது. உழைக்க வேண்டும். நேர்மையாக வாழ வேண்டும். நிறையச் சம்பாதிக்க வேண்டும்! என்ற எண்ணங்கள், ஒரு வசதி படைத்த சமூதாயத்தை உருவாக்குகின்றன. நியாயத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற எண்ணம் நீதியை, நியாயத்தை சட்டதிட்டங்களை மதிக்கும் ஒரு சமூதாயமாகத் தங்களை எண்ணிப் பெருமைப்படும்போது, அந்தப் பெருமையை நிலைநிறுத்தும் வகையில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவுகின்றனர். சமூதாயப் பணிகளில் ஈடுபடுகின்றனர். யாசிப்பது, கையேந்துவது, பிறரிடம் இனாமாகப் பொருளைப் பெறுவது கேவலம் என்ற எண்ணங்கள் மனிதனைத் தன்மானத்தோடு சுதந்திமாக வாழவைக்கின்றன.”**

என்று எடுத்துரைத்துள்ளார். மேலும் ஒரு நாடு முன்னேறுவதற்கும், வசதியுடன் வாழ்வதற்கும், நீதியை மதிப்பதற்கும், நெறிகளுடன் இயங்குவதற்கும் மக்களிடையே நிலவும் எண்ணங்கள் மக்களது மனோபாவம், சாதிக்க வேண்டும், முடியும் என்ற மனோபாவம் தான் காரணம் என்கிறார். மேலும்

**“நம்மால் முடியும் என்ற எண்ணமும், நம்பிக்கையும், இவ்வுலகையே மாற்றக்கூடிய வலிமை படைத்தவை நம் எண்ணங்களுக்கேற்பத்தான் நம் வாழ்வு அமைகிறது. நமது எண்ணங்கள் தான் நமது வாழ்வை நமது விதியை நமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் நிர்ணம் செய்கின்றன. எதை மனம் தன் மனக்கண்முன் காண்கிறதோ, எதை மனம் நம்புகிறதோ அதை அடைகிறது; அதுவாக மாறுகிறது என்பது**

**தான் மனம் பற்றிய உண்மை. இந்த உலகச் சாதனைகளின் மகத்தான ரகசியம்.”**

என்று அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு எம்.எஸ்.உதயமூர்த்தி நமது வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டும், இப்பூவுலகில் சாதாரண மனிதர்களாய்ப் பிறந்து தன் முயற்சியின் தன் உழைப்பின் காரணமாக உயர்ந்து நின்ற தலைவர்கள், தொழிலதிபர்கள் வாழ்வியலைக் கொண்டும். எதிர்காலத் தலைமுறையினருக்கு நம்பிக்கையூட்டி, நல்வழிக்காட்டியுள்ளார். உயர்ந்த சிந்தனையுடைய மகான்களின் அறிவுரைகளை எடுத்துரைத்தலுடன் உளவியல் சார்ந்தும் மனிதர்களின் மனநிலையைப் புலப்படுத்தி நற்சிந்தனைகளை விதைத்துள்ளார். அவருடைய சிந்தனைகளும் அறிவுரைகளும் இளந்தலைமுறைகளாகிய பயிர்களுக்கு நன்னீராய் உரமாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

## பார்வை நூல்கள்

1. டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி, வெற்றிக்கு முதல்படி(21-ஆம் பதிப்பு - 2015), கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

2. டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி, நெஞ்சமே அஞ்சாதே (37-ஆம் பதிப்பு - 2016), கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

3. டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி, தலைவன் ஒரு சிந்தனை (18-ஆம் பதிப்பு - 2015), கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

4. டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி, சிந்தனை தொழில் செல்வம் (32-ஆம் பதிப்பு - 2016), கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

5. டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி, நம்மால் முடியும் தம்பி நம்பு (34-ஆம் பதிப்பு - 2016), கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.